MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – II ISSUE – 2 FEB -2025
E-ISSN : 2584 - 1238

# சங்க இலக்கியத்தில் ஆடைசார் புழங்கு பொருள்

முனைவர் **மா.முத்துச்செல்வி**,
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராசரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
DOI 10.5281/zenodo.14911825

**Abstract ;**

Literature can be said to be the expression of human life. Just as modern literature reflects the lifestyle of today's people, Sangam literature depicts the lifestyle of the people of the Sangam period. Even though many literary elements such as imagination, parable, and metaphor are included in a literature, their content should be in line with the lifestyle of the people. Only literature that exists in this way will remain in the minds of the people over time. In this way, among the basic needs essential to human life, next to food is clothing. In ancient times, man wore animal skins as clothing to protect himself from the cold, and later, due to the development of civilization, he started wearing leaves as clothing. Later, he wore clothes based on the sense of beauty. In this way, the clothes that were in circulation among the people of the Sangam period are examined through literature. Thus, this study examines the way in which Sangam literature records the types of clothing that were in use during the Sangam period, such as the udukkai, odalis, oliyal, kalingam, kachu-var, thaliyadai, thokai, puttakam, poonkarai neelam, porvai, erani, kazhakam, thanai, and tugil.

**Key Words** : Sangam literature - imagination - Thamizhan Dress

இலக்கியங்கள் மனித வாழ்க்கையின் வெளிப்பாடு எனலாம். தற்கால இலக்கியங்கள் இன்றைய மக்களின் வாழ்க்கை முறையை எடுத்து இயம்புவதைப் போன்று சங்க கால மக்களின் வாழ்வியலை சங்க இலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. ஓர் இலக்கியத்தில் கற்பனை, உவமை, உருவகம் போன்ற பல இலக்கியக்கூறுகள் இடம்பெற்றிருப்பினும் அவற்றின் பாடுபொருளானது மக்களின் வாழ்வியலோடு பொருந்தியிருக்க வேண்டும். அவ்வாறு இருக்கும் இலக்கியமே காலம் கடந்து மக்கள் மனதில் நீங்காது நிலைத்திருக்கும். அவ்வகையில் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத அடிப்படைத் தேவைகளுள் உணவிற்கு அடுத்தபடியாக இருப்பது உடை ஆகும். ஆதிகாலத்தில் மனிதன் குளிரிலிருந்து தன்னை காத்துக்கொள்ள விலங்குகளின் தோல்களையே ஆடையாக உடுத்தியிருந்தான், பின்பு நாகரிக வளர்ச்சியின் காரணமாக இலை தழைகளை ஆடையாக உடுத்தலானான். பின்பே அழகுணர்வின் அடிப்படையில் ஆடைகளை அணியலானான். அவ்வகையில் சங்க கால மக்களின் புழக்கத்திலிருந்த ஆடைகளை இலக்கியங்களின் வழி ஆராயலாகின்றது. அவ்வகையில் சங்ககாலத்தில் வழக்கில் இருந்த உடுக்கை, உடை, ஒலியல், கலிங்கம், கச்சு-வார்,தழையாடை, தோக்கை,புட்டகம், பூங்கரை நீலம்,போர்வை,ஈரணி, காழகம், தானை, துகில் போன்ற ஆடை வகைகளை சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளமை ஆராய்வதாக இவ்ஆய்வு அமைகின்றது.

**உடுக்கை:**

உடுக்கை என்னும் சொல் உடுப்பதால் தோன்றியிருக்கலாம். உடுக்கும் முறை ஆடவர் மகளிர் இருவருக்கும் உடையதாக இருந்தாலும் ஆண்களே அதிகம் பயன்படுத்தியுள்ளமையை


http://Creativecommons.org//license/by/4.0/.

அறிய முடிகின்றது. திருமால் பெரியமலை எரிவது போன்ற பொன்னிழையாலான உடுக்கை ஆடை அணிந்தவன் என்பதை,

**"..................மால்வரை**
**எரி திரித்தன்ன பொன்புனை உடுக்கையை"** (பரி.பா.1:9-10)

என்ற பாடலடிகளின் வாயிலாகவும், கரிய திருமேனியுடன் மாறுபட்ட பொன்னிறப்பட்டாடையை திருமால் அணிந்துள்ளார் என்பதை,

**"மாஅ மெய்யொடு முரணிய உடுக்கையை"** **(பரி.பா.8:12)**

என்ற பாடலடியின் வாயிலாகவும் அறியலாகின்றது. மேலும், கரிய நிற ஆடையை உடுத்தியிருப்பவனாக பலராமனைக் குறிப்பிடுவதை,

**"புதை இருள் உடுக்கைப் பொலம் பனைக்கொடியோற்கு"** **(பரி.பா.2:22)**

என்ற பாடலடி விளக்குகின்றது. முருகப்பெருமானின் உடையைக் குறிப்பிடும் இடத்தில் குன்றி மணியை ஒத்த சிவந்த ஆடையை அணிந்தவன் என்பதை,

**"குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்"** **(குறு.பா.1:3)**

என்ற பாடலடியின் வாயிலாக அறியலாகின்றது. பெரும்பாலும் உடுக்கை என்ற சொல் உடையைக் குறித்தாலும் ஆண்தெய்வங்களின் உடையைக் குறிக்கும் முறையிலேயே பெருமளவு பயன்படுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

**உடை:**

சங்க இலக்கியங்களில் உடை குறித்துக் குறிப்பிடும் இடத்திலும் ஆண் தெய்வங்களைச் சுட்டியே குறிப்பிடப்பட்டுள்ளமையை,

**"பொன் ஒக்கும் உடையவை"** **(பரி.பா.1:59)**

என்ற பாடலடியில் திருமால் பொன் நிறத்தை ஒத்த உடையை உடையவன் என்பதையும்,

**"பால் அன்ன மேனியான் அணிபெறத் தைஇய**
**நீலநீருடை போல தகைபெற்ற வெண்திரை"** **(கலி.பா.124:2-3)**

என்ற பாடலடிகளில் பலராமன் நீலநிற உடையை உடுத்தியுள்ளான் என்பதையும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. உடை பற்றிய சான்றுகளும் மிகுதியாக ஆண் தெய்வங்கள் உடுத்திய நிலையினையே சுட்டுகின்றன.

**ஒலியல்:**

ஒலியல் என்பது மாலையையும் மேலாடையையும் குறிக்கின்றது. முருகப்பெருமான் அணிந்திருந்த மாலையும் உடையும் செம்மை நிறம் உடையவை என்பதை,

**"உடையும் ஒலியலும் செய்யை மற்று ஆங்கே"** **(பரி.பா.19:97)**

என்ற பாடலடியின் வாயிலாக அறியலாகின்றது.

**கலிங்கம்:**

கலிங்கம் என்பது இருபாலர் அணியும் ஆடையாகும். "இடத்து நிகழ் பொருளை இடத்தாற் கூறுதல் மொழியில் காணப்படும் பொதுக்கூறாகும். கலிங்கம் என்ற ஆடைப் பெயரும் கலிங்க நாட்டில் உருவானது காரணமாக அமைந்ததே"[1] என்பதிலிருந்து கலிங்கம் என்பது இடத்தால் பெற்ற பெயராக இருக்கலாம் என்ற கருத்து பெறப்படுகிறது. பெரும்பாலும் இவ்வாடையில் அதிக


http://Creativecommons.org//license/by/4.0/.

வேலைப்பாடுகள் காணப்பட்டதை இலக்கியங்களின் புலப்படுத்துகின்றன. பாணன் ஒருவனுக்குப் புரவலன் வழங்கிய கலிங்கத்தின் சிறப்பினை,

**"கழைபடு சொலியின் இழை அணி வாரா**
**ஒண்பூங் கலிங்கம் உடீஇ......."** **(புறம்.பா.383:11-12)**

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. மேலும், திருமண நாளன்று பெண்கள் அணிந்த ஆடையாகவும் கலிங்கம் குறிப்பிடப்படுவதை,

**"காதல்கொள் வதுவைநாள் கலிங்கத்துள் ஒடுங்கிய**
**மாதர்கொள் மான்நோக்கின் மடந்தைதன் துணையாக"** **(கலி.பா.69:3-4)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறிய முடிகின்றது. பல பூவேலைப்பாடுகளுடன் கூடிய ஆடையை அணிந்த செல்வமகளின் நிலையினை,

**"பல் கலை சில்பூங் கலிங்கத்தள் ஈங்கு, இது ஓர்**
**நல்கூர்ந்தார் செல்வ மகள்"** **(கலி.பா.56:11-12)**

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.இவற்றின் வாயிலாக கலிங்கம் என்னும் ஆடை பல வித வேலைப்பாடுகளுடன் கூடிய உயர்ந்த ஆடையாக சங்க காலத்தில் அணியப்பட்டமையை அறியலாகின்றது.

**கச்சு-வார்:**

கச்சு என்பது பெண்கள் மார்பிலும் வயிற்றிலும் இறுகக் கட்டிய ஆடையாகும். "சங்க காலத்திலிருந்தே பெண்களின் மார்பு ஆடை, கச்சு, வம்பு, வார் என்று அழைக்கப்பட்டது"[2]என்பர். இவை பொன் மற்றும் துணியால் ஆகியவையாகும். இதனை ஆண்களும் வார் போன்று பயன்படுத்தியுள்ளனர். அத்தி என்பான் கருமை நிறத்தில் கச்சு அணிந்திருந்தான் என்பதனை,

**"கருங்கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்கு"** **(அகம்.பா.376:8)**

என்ற பாடலடியின்; வாயிலாக அறியலாகின்றது. பெண்கள் வார் என்னும் ஆடையை அணிந்தமையை,

**"வார் முலை முற்றத்து நூலிடை விலங்கினும்"** **(அகம்.பா.361:5)**

என்ற பாடலடி விளக்குகின்றது.

**தழையாடை:**

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வினை வாழ்ந்தமைக்கு தழையாடை சிறந்த சான்றாகும். "தழையாடை அமைக்க நெய்தல், ஞாழல், ஆம்பல், குவளை, செயலை, நொச்சி போன்றவற்றின் தழைகள் பயன்பட்டன"[3] என்று குறிப்பிடுவர். இதன் வாயிலாக தழையாடை செய்ய பல வகையான தழைகள் பயன்பட்டமையையும், நிலத்திற்கேற்ப இத்தழைகள் மாறுபட்டு இருப்பதனையும் அறியமுடிகின்றது. பெரும்பாலும் களவொழுக்கத்தில் ஈடுபடுபட்ட தலைவன் தலைவிக்கு கையுறையாக **அளிப்பதே தழையாடையாகும். இதனை,**

**"விளியா விருந்து விழுவார்க்குக் கொய்தோய்**
**தளிர் அறிந்தாய் தாம் இவை"** **(பரி.பா.6:61-62)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாகின்றது.

**தோக்கை:**

தோக்கை என்னும் ஆடையினை ஆடல் மகளிர் நீண்டு தாழ உடுத்தியிருந்தமையை,


http://Creativecommons.org//license/by/4.0/.

**“தோள் தாழ்பு மலர்துவளா வல்லியின்**
**நீள்தாழ்பு தோக்கை நித்தில அரிச்சிலம்பு”** **(பரி.பா.22:48-49)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாகின்றது. தோக்கை என்பதற்கு கழகத்தமிழகராதி “சீலை, முந்தானை, மேற்போர்வை”[4] போன்ற விளக்கங்களைத் தருகிறது. இதிலிருந்து தோக்கை என்பது பெண்கள் அணியும் ஆடைவகை என்பதை அறியலாகின்றது.

**புட்டகம்:**

புட்டகம் என்பது நீராடுவதற்கு உடுத்தும் உடையாகும். சங்க இலக்கியங்களில் பரிபாடலில் மட்டுமே புட்டகம் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. வையையில் நீராடச் செல்லும் மகளிர் நீராடுவதற்கேற்ற புட்டகமாகிய புடவையினை அணிந்து சென்றமையை,

**“புட்டகம் பொருந்துவ புனைகுவோரும்”** **(பரி.பா.12:17)**

என்ற பாடலடியின் வாயிலாக அறியலாகின்றது.

**பூங்கரை நீலம்:**

பூங்கரை நீலம் என்பதனை பெண்கள் மட்டுமே அணியக்கூடிய ஆடையாக இலக்கியங்கள் சுட்டுகின்றன. கலித்தொகையில் மட்டுமே பூங்கரை நீலம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அன்னை தந்த பூங்கரை நீல ஆடையினை பெண்ணொருத்தி தாழ்ந்து தொங்குமாறு அணிந்திருந்தமையை,

**“...........யாய் தந்த**
**பூங்கரை நீலம் புடை தாழ மெய்யசைஇயப் பாங்கரும்”** **(கலி.பா.111:2-3)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாகின்றது. மேலும், நிலம் தாழ பூங்கரை நீலமாகிய ஆடையினை மெய்யுடன் அணைத்துக் கொண்டு தளர்வாக நடந்து சென்ற பெண்ணின் நிலையினை,

**“.....யானும் என் சாந்து உளர் கூழை முடியா**
**நிலம் தாழ்ந்த பூங்கரை நீலம் தழீஇ தளர்பு ஒல்கி**
**பாங்கு அரும் கானத்து ஒளித்தேன்”** **(கலி.பா.115:12-14)**

என்ற பாடலடிகள் பதிவு செய்துள்ளன.இவற்றின் வழி பூங்கரை நீலம் என்பது பெண்கள் அணியும் ஆடையாகவும், தரை வரை நீண்டு தொங்கும் ஆடையாகவும் இருந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**போர்வை:**

போர்வை என்ற சொல்லாட்சி இன்றைய காலகட்டத்திலும் மக்களிடையே வழக்கத்தில் உள்ளது. போர்த்திக் கொள்வதால் போர்வை எனப்பட்டிருக்கலாம். மேலும் போர்வை என்பதற்கு “தோல் மூடுதல், மெய்க்கவசம்,மேற்போர்வை”[5] என்று கழகத்தமிழகராதி விளக்கம் அளிக்கின்றது. வையை ஆற்றின் நீர் பல மலர்களைப் போர்வை போல் போர்த்திக் கொண்டு வந்தமையை,

**“நீலவரை அல்லல் நிழத்த விரிந்த**
**பலவுறு போர்வைப் பருமணல் மூஉய்”** **(பரி.பா.10:4)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறிய முடிகின்றது. தோழி இரவில் அழகிய துகிலாற் அமைந்த போர்வையை போர்த்திக் கொண்டு சென்றமையை,

**“அம்துகில் போர்வை அணிபெறத் தைஇநம்”** **(கலி.பா.65:4)**


http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற பாடலடி விளக்குகின்றது. இவற்றின் வழி போர்வை என்பது குளிருக்காக போர்த்திக் கொள்ளவும், தலை முதல் கால் வரை உடலை மறைத்துக் கொள்ளவும், மூடிவைக்கவும் ஏற்ற நீண்ட நெடிய ஆடை என்பது புலனாகிறது.

**ஈரணி:**

ஈரணி என்பது நீராடுவதன் போது அணியும் ஒருவகை ஆடையாகும். இஃது ஆடவர், மகளிர் இருவரும் அணியும் பொது ஆடையாகவே உள்ளது. தலைவன், தலைவியுடன் மட்டுமன்றி பரத்தையுடனும் நீராடுகின்றான் பின்பு ஈரணி சிதையாது தலைவி முன் சென்ற தலைவனின் நிலையினை,

**“தார்கொண்டாள் தலைக் கோதை**
**தடுமாறிப் பூண்ட நின் ஈரணி சிதையாது**
**எம் இல் வந்து நின்றதை?”** **(கலி.பா.66:14-16)**

என்ற பாடலடிகளின் வாயிலாகவும்,

**“பூப் பலிவிட்ட கடவுளைக் கண்டாயோ?**
**ஈரணிக்கு ஏற்ற ஒடியாய் படிவத்து”** **(கலி.பா.93:24-25)**

என்ற பாடலடிகளின் வாயிலாகவும் அறியலாகின்றது. இக்காலகட்டத்தில் மக்கள் பயன்படுத்தும் நீச்சல் உடைபோன்றே சங்ககாலத்தில் ஈரணி பயன்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது **காழகம்:**

காழகம் என்பது கரை போட்ட ஆடையாகும். இதனை ஆண்களும் பெண்களும் கச்சமாக இடையில் கட்டிக் கொண்டுள்ளனர். போர்க்களத்தில் அம்புகள் தொடுக்கும் முன்னர் கைகளில் காழகம் அணிந்து கொண்டமையை,

**“நீயே வினைமாண் காழகம் வீங்கக் கட்டி**
**புணைமாண் மரீஇய அம்பு தெரிதியே”** **(கலி.பா.7:9-10)**

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

**தானை:**

தானை என்பது இடையில் அணியும் ஆடை, மேலாடை இரண்டையும் குறிக்கின்றது. தலைவனைத் தலைவி கனவில் காணும் போது அவன் தப்பிச் செல்லாதவாறு தாழ்ந்து தொங்கும் அவனது ஆடையைப்பற்றுவேன் என்கிறாள். இதனை,

**“கையறு செய்தானைக் காணின் கலுழ் கண்ணால்**
**பையென நோக்குவேன் தாழ்தானை பற்றுவேன்”** **(கலி.பா.147:48-49)**

என்;ற பாடலடிகள் விளக்குகின்றன. ஆகவே தானை என்பது ஆடவர் மேலிருந்து கீழாக தாழ்ந்து அணியும் ஆடையாக அமைந்திருக்கலாம் என்பதை அறிய முடிகின்றது.

**துகில்:**

சங்க இலக்கியத்தில் தழையாடைக்கு அடுத்து அதிகமாக பயன்படுத்தப்பட்ட ஆடை துகிலாகும். துகில் வெண்மை நிறமுடையதாகவும், செந்நிறமுடையதாகவும் நெய்யப்பட்டது. மேலும் பூ வேலைப்பாடுடனும் காணப்பட்டது. முழு வேலைப்பாடுடன் கூடிய துகிலும், பல மலர்களைச் சுமந்து வரும் வையைப் பெருக்கும் ஒன்றாகக் காட்சியளித்தமையை,

**“துகில்சேர் மலர் போல் மணிநீர் நிறைந்தன்று”** **(பரி.பா.12:93)**

என்ற பாடலடி விளக்குகின்றது. நீராடிய மகளிர் பூ வேலைப்பாடுடைய வெண்மையான துகிலைக் கூந்தல் மேல் சுற்றி முறுக்கியதை,

**“மீப்பால் வெண்துகில் போர்க்குநர் பூப்பால்”** **(பரி.பா.10:73)**


http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற பாடலடி விளக்குகின்றது. துகில் என்பது பூ வேலைப்பாடுகளுடன் கூடிய மெல்லிய ஆடை என்பதையும் இது துணிவகைகளுள் ஒன்று என்பதும் புலனாகிறது.

**குழந்தைகள் அணியும் ஆடைகள்**

குழந்தையின் மென்மைத்தன்மைக்கு ஏற்ப மென்மையான ஆடையினையே குழந்தைகளுக்கு அணிவித்தமையை,

**"உருளஞ்சாது இடைகாட்டும் உடைகழல் அம்துகில்" (கலி.பா.81:5)**

என்ற பாடலடி விளக்குகின்றது. மேலும் குழந்தையின் இடையில் மெல்லிய வெண்பட்டாடையை அணிந்தமையை,

**"தைஇய பூந்துகில் ஐதுகழல் ஒருதிரை" (கலி.பா.85:5)**

என்ற பாடலடியின் வாயிலாக அறியலாகின்றது. குழந்தைகள் அணியும் ஆடைகள் மென்மையான ஆடையாகவும், பட்டாடையாகவும் அமைந்துள்ளமையை இலக்கியங்களின் வாயிலாக அறியலாகின்றது.

சங்ககால மக்கள் பயன்படுத்திய ஆடைகளில் பல வகையான நேர்த்தியான ஆடைகளை ஆடவர், மகளிர் என இருபாலரும் புழங்கியமை நாகரிக சமூகத்தின் வெளிப்பாடக அமைந்தது எனலாம். மேலும், குளிப்பதற்கு ஏற்ற ஆடையாக ஈரணி, புட்டகம் ஆகிய ஆடைகளைப் பயன்படுத்தியமை பற்றிய குறிப்புகள் சங்ககால மக்கள் உயர்ந்த நாகரிக பண்பாட்டுச்சூழலை உருவாக்கியமையைவிளக்குகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. கு.பகவதி, தமிழர் ஆடைகள், ப.37
2. கு.பகவதி, மு.நூ., ப.52
3. மேலது, ப.28
4. கழகத்தமிழகராதி ப.585


http://Creativecommons.org//license/by/4.0/.